செ.வெ.எண்: 536/2016 நாள்: 17.08.2016

# பத்திரிக்கைச் செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் கூட்டுறவு சங்க பணியாளர்கள் மூலம் அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் செட்டித்தெரு, பறக்கை ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் தோவாளை வட்டத்தில் தடிக்காரன்கோணம், குமாரபுரம் ஆகிய நியாயவிலைக் கடைகளிலும், கல்குளம் வட்டத்தில் குளச்சல், திருவட்டார் ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் விளவங்கோடு வட்டத்தில் தோட்டவரம்-1 மற்றும் தோட்டவரம்-II ஆகிய நியாயவிலைக் கடைகளிலும் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலுள்ள வீடுகளிலும் போலி குடும்ப அட்டைகள் மற்றும் நியாயவிலைக் கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் 100% திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. தணிக்கையின் போது போலி என கண்டறியப்பட்ட 52 குடும்ப அட்டைகளுக்கு உணவு பொருள் நிறுத்தம் செய்யப்பட்டது. மேலும் இருப்புக்குறைவு, எடைகுறைவு மற்றும் போலிப்பட்டியல் போன்ற இனங்களில் முறைகேடு செய்யப்பட்ட நியாயவிலைக் கடை பணியாளர்களின் மீது ரூ.22,165/- அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்,
(இ) நாகர்கோவில்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.